Pranav Journals ISSN:2582-9599 Tamil

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சித்தர் பாடல்களில் அறிவியல்

திருமதிகோ ஹேமலதா .
தமிழ்த்துறை,உதவிப் பேராசிரியர்,
அக்சிலியம் கல்லூரி (தன்னாட்சி),வேலூர் 632006.
hemapersonal146@gmail.com

52

**ஆய்வுச் சுருக்கம்**

சித்தர்களின் பாடல்கள் அறிவார்ந்த நோக்கத்தோடும் முன்னோக்குச் சிந்தனையோடும் இயற்றப்பட்டவை ஆகும்தொழில்நுட்பக் கருவிகள் இல்லாத காலங்களில் அறிவியல் நுட்பங்களை . ஆய்ந்து, அனுபவங்களில் தோய்ந்து, இயற்கையோடு இணைந்து நமக்கு நூல்களைப் படைத்தளித்துள்ளனர் என்பதை விளக்கும் முயற்சியாக இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்**

சித்தர்கள் விளக்கம் - வானியல் பற்றிய அறிவியல் - மருத்துவத்தில் அறிவியல் - ஆழிப்பேரலை குறித்த திருமூலர்கருத்து வேதியல் துறையில் - உடல் நலம் பற்றிய அறிவியல் - போகர் பாடலில் அறிவியல் - அறிவியல்

**முன்னுரை**

”கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த குடி தமிழ் குடி” என்பது ஆன்றோர் வாக்கு. அக்குடியில் தோன்றிய சித்தர்களின் பாடல்களும் படைப்புகளும் ஒவ்வொன்றும் நம் தமிழர்களின் வாழ்வியலை வளம் பெறச் செய்யும் அருமருந்தாகவும் அறிவியல் சித்தாந்தங்களை அழகாகப் படம் பிடிக்கும் காலக் கண்ணாடியாகவும் அமைந்துள்ளன.

**சித்தர்கள் விளக்கம்**

சித் அறிவு -, சித்தை உடையவர்கள் சித்தர்கள்சித்தர்கள் என்றால் நிறைமொழி மாந்தர . என்றும் அறிஞர் பெருமக்கள் கூறுவர். சித்தர்கள் மருத்துவத்தோடு யோகம், ஜோதிடம், மந்திரம், ரசவாதம் போன்ற அறிய அறிவியலையும் தந்தவர்கள் சித்தர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

" செத்தவர் தம்மை எழுப்பித் தருகின்ற சித்தர் பிறந்த தமிழ்நாடு" - என சித்தர்களின் பெருமை பற்றி பாராட்டுகிறார் பாரதியார். மக்களின் ஆன்மீகம் கலைக்கு ஆரோக்கியம் சேர்க்கவும் முக்கியப் பங்காற்றியவர்கள் சித்தர்கள். தத்துவ நதிகளாலும் மருத்துவ ரீதியாகவும் பல நூல்களைப் படைத்துள்ளனர். ஆன்மீகத்திலும் அறிவியல் ஆய்வுகளிலும் நிறைவு பெற்ற நிலைதான் சித்தி என்பது. அவ்வகையில் சித்தி பெற்றவர் சித்தர். இவர்கள் சமய சமுதாயத்திற்கு ஆன்மீகப் புரட்சியாளர்கள் ஆவர். அறிவியலின் முன்னோடிகளாகவும் திகழ்ந்தனர். உலக இன்ப துன்பங்கள், பட்டம், செல்வாக்கு, பதவி, புகழ் முதலியவற்றிற்கு அப்பாற்பட்டவர்கள். சித்தர்களில் முதலில் அகத்தியர் பின் ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமூலர், சித்தர் பரம்பரையில் தலைவராக விளங்கியவர்கள் ஆவர்பொதுவாகச் சித்தர்கள் தாம்வாழும் காலத்தில் தன்னலமற்று . .வாழப் பழகிக் கொண்டவர்கள் சித்தர்கள் உடல், மனம், மற்றும் அறிவு வளர்ச்சிக்குப் பயன்படும்

வகையில் யோக ஆய்வுகளை செய்து யோக நூல்களையும் படைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இக்கட்டுரையில் மருத்துவம், வானியல், வேதியல், பேரண்டம், உடல்நலம் போன்றவற்றில் சித்தர்களின் பங்களிப்பினை இக்கட்டுரையில் காண்போம்.

**மருத்துவத்தில் அறிவியல்**

சித்தர்கள் மெய்ஞானம் அறிந்த விஞ்ஞானிகள் ஆவர். 96 உடல் தத்துவங்களாக பிரித்து மனித உடற் கூறியலை (human anatomy) ஆராய்ந்தனர். நோயியல் துறையில் மிக ஆழமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு மனிதர்களுக்கு ஏற்படும் நோய்கள் 4448 என்று வரையறுத்தனர். இது நோயியல் துறையில் அவர்களின் ஆழமான அறிவைக் காட்டுகிறது. மூச்சு உறுப்புகளில் ஏற்படும் நோய்களைக் கப நோய்கள் எனவும், செரிமான உறுப்புகளில் ஏற்படும் நோய்களைப் பித்த நோய்கள் எனவும், மற்றவை வாத நோய்கள் எனவும் வகைப்படுத்தினர். நரம்பியலை ஆராய்ந்து வர்ம மருத்துவத்தைக் கண்டுபிடித்தனர். இந்த வர்ம மருத்துவம் சித்தர்கள் கண்டுபிடித்த நரம்பியல் மருத்துவம் )neurological medicine) ஆகும்.

தமிழ்நாட்டில் இருந்த சித்தர்கள் 18 பேர் என்று கூறுவர்அகத்தியர் ., திருமூலர், இடைக்காடர், கோரக்கர், கொங்கணர், காலாங்கிநாதர், போகர் , புலிப்பாணி, கருவூரார், மச்சமுனி, கமல முனி, சட்டை முனி, பிரம்ம முனி, பாம்பாட்டி சித்தர், குதம்பை சித்தர், தேரையர், சிவவாக்கியர், பதஞ்சலி போன்றோர் ஆவர்.

**வானியல் பற்றிய அறிவியல்**

தனிமனிதனையும் பேரண்டத்தையும் இணைக்கின்ற வகையிலே சில ஆற்றல்களை நம்முடைய சித்தர்கள் வளர்த்து வந்துள்ளார்கள் என்பதை சித்தர் இலக்கியங்களிலே அறிகிறோம். விண் பொறியியல் துறையில் போகர் ஆராய்ந்து அதன் பயனாக பஞ்சபூதத்தால் செய்த ஆகாயப் புரவி என்ற விமானத்தைக் கண்டுபிடித்து சீனாவுக்கு பயணம் செய்திருக்கிறார். இந்த ஆகாயப் புரவி பற்றிய குறிப்புகளை போகர் 7000 என்ற நூலில் காண முடிகிறது.

" அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் " என்று ஒரு சித்தர் மொழி வழங்குகிறது. புறமும் அகமும் ஒருசேர அமைப்பில் உள்ளன என்ற அடிப்படை உண்மையை இச்சித்தர் மொழி கூறுவதோடு ஓர் அமைப்பின் மாற்றத்தில் மற்றொரு அமைப்பும் தானாக மாறிவிடுகிறது என்ற பேருண்மையையும் இது எடுத்துக்காட்டுகிறது.

பால்வீதி தூசி நிறைந்தது என்பது அறிவியல் அறிஞர்களின் கண்டுபிடிப்பு ஆகும் இடையே சட்டை முனி சித்தர் " தூசி என்ற வெளியல்லோ அண்ட வீதி சொக்காமல் திரிக்கொண்டே ஆக்கியரே" என்ற பாடலில் அண்டவெளி பற்றி குறிப்பிடுகின்றார்.

**ஆழிப்பேரலை குறித்த திருமூலர் கருத்து**

"அலை கடல் ஊடறுத்து அண்டத்தில் வானோர்
தலைவன் எனும் பெயர் தான்தலை மேற்கொண்டு
உலகார் அழற் கண்டு உள் விழாது ஓடி

அலை வாயில் விழாமல் அஞ்சல் என்றானே " என்ற இவ் வரிகள் மூலம் திருமூலரின் ஆழிப்பேரலை குறித்த ஆழ்ந்த அறிவியல் சிந்தனையை நம்மால் உணர முடிகிறது.

**உடல் நலம் பற்றிய அறிவியல்**

பண்டைத் தமிழரின் அறிவியல் அறிவின் சிகரமே சித்த வைத்தியமாகும். உடம்பும் உயிரும் நெருங்கிய தொடர்புடையவை. இதனையே நம் திருமூலர் மறைமுகமாக உருவகப்படுத்தி உரைத்தார். " உள்ளம் பெருங்கோயில் உன் உடம்பு ஆலயம் " என்று இரண்டையும் தொடர்பு படுத்திக் கூறுவதில் அவருடைய உடல் நலம் பற்றிய அறிவியலாளர்ந்த சிந்தனை வெளிப்படுகிறது.

" திருவின் கருக்குழி தேடி புகுந்து

துருவம் இரண்டாக ஓடி விழுந்ததே" (154)

உடம்பார் அழியின் உயிரார் அழிவர் )204)

போன்ற வரிகளில் மூலம் சித்தர்கள் உடல்நலம் குறித்த அறிவியல் சிந்தனை நமக்குத் தெளிவாகப் புலப்படுகிறது. " உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே " (திருமந்திரப் பாடல் 724) "உள்ளம் பெருங்கோயில் உன் உடம்பே ஆலயம்" (திருமந்திரப் பாடல் 1823) என்று திருமூலர் உடல் ஆரோக்கியத்திற்கும் வளமான வாழ்விற்கும் உடல் நலத்தைக் காக்கும்படி கூறுகின்றார்.

“நந்தவனத்தில் ஓர் ஆண்டி அவன் -

நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி

கொண்டு வந்தான் ஒரு தோண்டி மெத்தக் -

கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி “....

(சித்தர் பாடல்கள்கடுவெளி சித்தர் :, பாடல் எண் -4)

பத்து மாதங்களாக தவம் செய்து இந்த உடலை பெற்று வந்தாயே? மனிதா கூத்தாடி கூத்தாடி போட்டு உடைப்பதற்கு தானா? ஏன் சிந்திக்க மாட்டேன் என்கிறாய். இந்த உடல் உள்ளபோதே ஆன்மா கடைத்தெற வழி காண வேண்டாமா? எனச் சொல்லாமல் சொல்லி நெஞ்சில் இடித்துக் காட்டுகிறார் இச்சித்தார். உடல் என்ற தோண்டியை மனிதன் போட்டு உடைக்கிறான் என்பதன் மூலம் மனிதனின் ஜீவர ரகசியத்தை பாடல் மூலம் மறைபொருள் கொண்டு விளக்குகிறார் கடுவெளி சித்தர்.

**வேதியல் துறையில் அறிவியல்**

தமிழர் கண்ட வேதியியல் அற்புதங்களை தரணியில் உள்ளோருக்கு எடுத்துக்காட்ட இந்தச் சட்டை முனி வாத காவியம் ஒன்றே போதும்இதில் உள்ள வேதியியல் விந்தைகளை அதிசய ! . அற்புதங்களை சிறிதள வேணும் எடுத்துக்காட்ட வேண்டும் என்றால் அது மழையை தகர்க்க ஒரு சிற்றுளியை எடுத்துக்கொண ்டு கிளம்பிய கதையாகும்.

துத்தநாகத்தை வங்கமாக்கு - வெள்ளியை இரும்பாக்கு - வங்கத்தை வெள்ளியாக்கு - செம்பை தங்கமாக்கு என்று எடுத்த எடுப்பிலேயே ரசவாதத்தை அலச - இரும்பை செம்பாக்கு .துவங்கி விடுகிறார் சட்டை முனி

**போகர் பாடலில் அறிவியல்**

” பாங்கான பாடாணம் ஒன்பதினும் பரிவான விபரம் தான் சொல்லக்கேளு
கௌரி கெந்திச்சீலைமால் தேவி கொடு வீரம்கச்சால்

வெள்ளை

நலமான மனோம்மணி கடாட்சதாலே நண்ணிநீ

ஒன்பதையும் கட்டு கட்டு" - போகர்

இப்பாடலில் கௌரி பாஷாணம் -arsenic Penta sulpfide

கெந்தகப் பாஷாணம் -sulfur

சீலைப் பாஷாணம் -arsenic di sulphite

கச்சாலப் பாஷாணம் -

வீரப் பாஷாணம் -Mercuric chloride

வெள்ளை பாஷாணம் ஆர்சனிக் ட்ரை ஆக்சைடு -

சூதப் பாஷாணம் – Mercury
தொட்டிப் பாஷாணம் மற்றும் சங்கு பாஷாணம்
இவைகளை பல செய்முறைகளுக்கு உட்படுத்தி அவற்றைச் சுத்திகரித்து பழனி தண்டாயுதபாணி விக்ரகம் வடிவமைக்கப்பட்டதாக போகர் இப்பாடலில் கூறியிருக்கிறார். இன்றளவும் இதன் செய்முறை புதிராகவும் நவீன அறிவியலுக்கு சவால் விடும் விதமாகவும் அமைந்திருப்பது ஆச்சரியமான ஒன்றாகக் கருதப்படுகிறது.

**முடிவுரை**

சித்தர் இலக்கியங்களில் பாடுபொருள்களில் கண்டெடுக்கப்பட்ட அறிவியல் சார்ந்த கருத்துக்கள் ஏராளம். உடல் கூறுகள், வானியல் செய்திகள், மருத்துவக் கூறுகள் போன்றவற்றில் மிளிர்ந்து கிடக்கும் சித்தர்களின் அறிவியல் சிந்தனைகளைக் குறிப்பிடும்வகையில் இக்கட்டுரையானது அமைந்துள்ளது. வாலன்டைன் என்ற புகழ்பெற்ற பேராசிரியர், 10 ஆண்டு காலம் உலகின் உணவு முறை பற்றி ஆராய்ச்சி செய்தார்உலகில் மிகச்சிறந்த உணவு முறை தமிழர் . உணவே மருந்து .கண்ட உணவு முறை என்று குறிப்பிட்டுள்ளார், மருந்தே உணவு என்ற பெருமை நம் மருத்துவத்திற்கு மட்டும் உண்டுஇதற்கு ஆணிவேராகத் திகழ்வது சித்தர்களால் . கண்டுபிடிக◌்கப்பட்ட மூலிகை மருத்துவமாகும். இவ்வாறு மனித வாழ்க்கை முறைக்குத் தேவையான அனைத்து ஆரோக்கிய முறைகளையும் மிக எளிமையான வைத்திய முறைகள் மூலமும் எளிய பாடல்களின் வழியாகவும் நம் அனைவருக்கும் பயன்படும் வகையில் நமக்கு அளித்துள்ளனர். சித்தர்இலக்கியங்களைப் போற்றுவோம், வாழ்வில் வளம் பெறுவோம்.

**துணை நின்ற நூல்கள்**


- சட்டை முனி வாத காவியம் 1000 - தாமரை நூலகம், சென்னை- 26
- 18 சித்தர்கள் வரலாறு, பிருந்தாவனம் பதிப்பகம் சென்னை – 40
- திருமந்திரப் பாடல் 724
- திருமந்திரப் பாடல் 1823

- சித்தர் பாடல்கள்கடுவெளி சித்தர்பாடல் :
- http://tamilsiddhas.blogspot.com
- http://www.tamilvu.org
- http://www.shcpub.edu.in
- http://thamilsiddhas.blogspot.com
- http://tamildigitallibrary.in




